குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,

**குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவையாறு**

**2026–ம் வருடம் மார்ச் மாதம், 11–ம் நாள், புதன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 268/2021**

CNR NO: TNTJ16003046-2021

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
**திருக்காட்டுப்பள்ளி** காவல் நிலையம்,
குற்ற எண். 531/2021 ....

குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

ராஜா, வயது 39/2021
த/பெ. பீட்டர்,
தெற்குத் தெரு,
அலமேலுபுரம் பூண்டி. .....எதிரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாண்புமிகுசென்னைஉயர்நீதிமன்ற07.04.2021 நாளிட்டR.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படிCASE SUMMARY கீழ்கண்டவாறுவிவரிக்கப்படுகிறது. | | | | | |
| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Released on** |
| | | | Raja | Surrendered and released on bail on 17.08.2021 by the Judicial Magistrate Thiruvaiyaru. | |
| (ii) | **The date of filing of the complaint/ final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | 08.08.2021 | 15.11.2021 | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | – | | |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:55:49 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iv) | **The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe** | : | 07.04.2022 | | | |
| (v) | **Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code** | : | **Crl.M.P.No.** | | **Date of Filing** | **Result** |
| | | | **Crl.M.P.No.2718/2021 U/s. 311 Cr.PC** | | **08.08.2023** | **Allowed** |
| (vi) | **Date of examination in–chief and cross–examination of a witness** | : | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW1 | Meena | 05.06.2023 | 27.08.2024 |
| | | | PW2 | Sathish Kumar | 05.06.2023 | 27.08.2024 |
| | | | PW3 | Alagar | 05.06.2023 | 27.08.2024 |
| | | | PW4 | Radhika | 26.06.2024 | – |
| | | | PW5 | Vigneshwaran | 20.08.2024 | 20.08.2024 |
| | | | PW6 | Pandiyan | 19.09.2024 | 19.09.2024 |
| | | | PW7 | Boominathan | 09.10.2024 | 09.10.2024 |
| | | | PW8 | Gomathi (IO) | 08.10.2025 | 08.10.2025 |
| (vii) | **Date of examination of the accused U/Sec 313 of the Code** | : | 24.10.2025 | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be; and** | : | – | | | |
| (ix) | **Grant of stay by superior** | : | **Sessions Court** | **High Court No and Date** | | **Result** |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:55:56 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **Courts and the results thereof** | | **CMP Numbers** | **of Stay** | |
| | | | NIL | | |

| | | |
|---|---|---|
| 1–வதுகுற்றச்சாட்டு | : | எதிரி, TN49 CA 1769 என்ற Tata Ace வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து புகார்தாரரின் கணவர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்திய செயலுக்காக இதச.பிரிவு.279–ன் கீழ் |
| 2–வதுகுற்றச்சாட்டு | | எதிரி மேற்படி விபத்தில் புகார்தாரரின் கணவருக்கு இறப்பை ஏற்படுத்திய செயலுக்காக இதச. பிரிவு. 304(A)–ன் கீழ் |
| எதிரியின் பதில் | : | பொய்வழக்கு. |
| நீதிபதியின்தீர்மானம் | : | குற்றவாளி இல்லை என முடிவு. |
| உத்தரவு(அ) தண்டனை | : | 1.எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள். 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.<br>2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.<br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:00 +0530

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 15.11.2021–ஆம் தேதி ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 268/2021–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 18.12.2025ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.**M. ராஜகோபால்., M.A., B.L.,** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை என் ஆய்வில் வைத்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள். 279, 304(A)ன் கீழ் திருக்காட்டுப்பள்ளி காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கின்சுருக்கம்:–</u>**

கடந்த 07.08.2021–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் கல்லணை To திருவையாறு ரோடு நாகாச்சி ஆர்ச் அருகில் புகார்தாரரின் கணவர் ஓட்டி சென்ற TN 48 AY 4741 என்ற Hero HF –Deluxe என்ற இருசக்கர வாகனத்தின் மீது எதிரி TN 49 CA 1769 என்ற TATA ACE வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, மோதி புகார்தாரரின் கணவருக்கு இறப்பை ஏற்படுத்தி, இ.த.ச. பிரிவு 279, 304(A)–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் திருக்காட்டுப்பள்ளி காவல் ஆய்வாளர் கு.வி.மு.ச பிரிவு 173–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:06 +0530

**2.** எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A) கீழ் குற்றச்சாட்டின் சுருக்கம் வனைந்து எதிரிக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**<u>4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–</u>**

அ.சா.1 – புகார்தாரர் அன்பிலில் குடியிருந்து வருகிறார். கடந்த 07.08.2021 ஆம் தேதியன்று காலையில் வீட்டிலிருந்து கிளம்பி அலுவலகத்திற்கு சென்ற புகார்தாரரின் கணவர் மீது பூண்டி ஆர்ச் புதுப்பாலம் அருகே காலை 10.00 – 10.15 மணியளவில் டாடா ஏஸ் வாகனம் அதிவேகமாக வந்து மோதியதில், புகார்தாரரின் கணவருக்கு கை, கால், முகம் ஆகிய இடங்களில் காயம் ஏறபட்டு விபத்துக்குள்ளாகிவிட்டதாகவும், அவரை திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்துள்ளதாகவும், அவரை அங்கிருந்து திருச்சி பிரண்ட்லைன் மருத்துவமனைக்கு அழைத்து செல்லபோவதாகவும் புகார்தாரரின் உறவினர் தகவல் சொன்னதன்பேரில் புகார்தாரர் திருச்சி பிரண்ட்லைன் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அங்கு புகார்தாரரின் கணவர் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்து, அதன் பிறகு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:11 +0530

கடந்த 07.08.2021–ம் தேதி திருச்சி பிரண்ட் லைன் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில், அ.சா.7–தலைமைக் காவலர் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த புகார்தாரரின் கணவர் மயக்க நிலையில் இருந்ததால், அவர் உடன் இருந்த புகார்தாரரை விசாரித்து வாக்குமூலம்–அ.சா.ஆ.1 பெற்று, நிலைய குற்ற எண். 531/2021, சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.ச. வின் கீழ் முதல் தகவல் அறிக்கை–அ.சா.ஆ–4 வழக்கு பதிவு செய்து முதல் கட்ட விசாரணை செய்துள்ளார். அ.சா.8–காவல் ஆய்வாளர், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு புகார்தாரரின் கணவர் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப் பிரிவை ச/பி. 279, 304(A) இ.த.ச. வாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை–அ.சா.ஆ–7 தயார் செய்து, மறுநாள் அவரது பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை–அ.சா.ஆ–8 தயார் செய்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய எதிரி நீதிமன்ற முன் பிணை பெற்றுவிட்டதை தெரிந்து கொண்டார்.

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN49 CA 1769 TATA ACE வாகனத்தையும், TN48 AY 4741 Hero இருசக்கர வாகனத்தையும், ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ–9., அ.சா.ஆ–10 பெற்றார். 18.09.2021 ஆம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. விஜயகுமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அன்றைய தினமே இவ்வழக்கில் இறந்து போன நபருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. செல்வக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை–அ.சா.ஆ–11 பெற்றுள்ளார். பிரேத பரிசோதனை செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் எடுத்து சென்ற காவலரையும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து 18.09.2021–ல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:18 +0530

**6. இருதரப்பு வாதங்களின் சுருக்கம்:–**

கடந்த 07.08.2021–ஆம் தேதி காலை 10 மணியளவில், கல்லணை டு திருவையாறு ரோடு நாகாச்சி ஆர்ச் அருகில், எதிரி டாட்டா ஏசி வாகனத்தை, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து புகார்தாரரின் கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி, அவருக்கு காயங்களை ஏற்படுத்தியதன் மூலம் அவரது இறப்பிற்கு காரணமாக இருந்து இத.ச பிரிவுகள் 279, 304(A)–ன்கீழ் குற்றம் இழைத்துள்ளதாக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், அரசு தரப்பு சாட்சி சான்றாவணங்களின் மூலம் எதிரியின் குற்றச் செய்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரையில், எதிரிக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும், எதிரி ஓட்டி சென்ற டாட்டா ஏசி வாகனத்திற்கு வலது புறத்தில், கார் ஒன்று சென்றது என்று அரசு தரப்பு சாட்சிகள் குறிப்பாக போலீசார் விசாரணையிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் சொல்லியுள்ள நிலையில், மேற்படி கார் ஓட்டி வந்த நபரால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், ஆனால், மேற்படி கார் சென்றுவிட்டதால் விபத்தை எதிரி ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும் கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டவர்கள் புகார்தாரரின் நெருங்கின உறவினர்கள் என்றும், எதிரியின் குற்றச் செய்கை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகங்களின் பலனை எதிரிக்கு

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:23 +0530

அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எழுத்துப்பூர்வ வாதுரையில் சொல்லப்பட்டு வாதம் செய்யப்பட்டது.

**6.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, **கு.வி.மு.ச. பிரிவு. 313(1)(ஆ)–ன்** கீழ் எதிரியிடம் வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிரியின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியபிரச்சனையாதெனில்,**

(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு.279, 304(A)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?என்பதேயாகும்.

**8. தீர்வு:–**

கடந்த 07.08.2021–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் கல்லணை டு திருவையாறு ரோடு நாகாச்சி ஆர்ட்ஸ் அருகில் எதிரி TN 49 CA 1769 TATA ACE என்ற வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, புகார்தாரரின் கணவர் ஓட்டி சென்ற TN 48 AY 4741 என்ற Hero HF –Deluxe இருசக்கர வாகனத்தின் மீது மோதி அவருக்கு இறப்பை ஏற்படுத்தி, இத.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

07.08.2021–ஆம் தேதி 10.00 மணியளவில் விபத்து நடந்ததாக சொல்லப்பட்டு, 08.08.2021அன்று 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 12.08.2021– ஆம் தேதி காலை 10.30மணிக்கு முதல் தகவல்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:28 +0530

அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை 18.09.2021–ஆம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 15.11.2021–ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புகார்தாரர் கொடுத்துள்ள புகார் வாக்குமூலம்–அ.சா.ஆ.1–ல் "07.08.2021–ஆம் தேதி TN 48 AY 4741 என்ற Hero HF –Deluxe இருசக்கர வாகனத்தை புகார்தாரரின் கணவர் ஓட்டி சென்று, நாகாச்சி வளைவு அருகில் வந்தபோது, எதிரி TN 49 CA 1769 TATA ACE வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் எதிரி ஓட்டி வந்து புகார்தாரின் கணவர் சென்ற இருசக்கர வாகனத்திற்கு வலது பக்கம் சென்ற காரை கவனிக்காமல், தனது வாகனத்தை மேற்கு நோக்கி திருப்பி கார் மீது மோதாமல் இருக்க, திடீரென்று புகார்தாரரின் கணவர் ஓட்டி வந்த வாகனத்துக்கு நேராக தனது டாட்டா ஏசி வாகனத்தை திருப்பி மோதியதாக" சொல்லப்பட்டுள்ளது. <u>புகார்தாரர் அ.சா.1</u>–ஆக அளித்துள்ள சாட்சியத்தில், 07.08.2021–ஆம் தேதி புகார்தாரரின் கணவர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது நாகாச்சி பூண்டி ஆர்ச் புது பாலம் அருகே டாட்டா ஏசி வாகனம் மோதியதாக <u>போன் மூலம் தகவல் வந்ததாக</u> சொல்லியுள்ளார்.

கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, 3 தங்கள் சாட்சியத்தில், விபத்தில் இறந்துபோன பிரசன்னா இருசக்கர வாகனத்தில், அலமேலுபுரம் பூண்டியில் இருந்து திருக்காட்டுப்பள்ளிக்கு சென்று கொண்டிருந்தார் என்றும், எதிரி டாடா ஏசி வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும் பாலத்தில் வந்து மேற்கு திசையை நோக்கி திரும்பும்போது, எதிர் திசையில் இருசக்கர வாகனத்தில் வந்த பிரசன்னாவை கவனிக்காமல் மோதி விட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.4 தனது சாட்சியத்தில், விபத்து குறித்து அ.சா.2 தனக்கு தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 மற்றும் 6–ஆன பார்வை மகஜர் சாட்சிகள், பார்வை மகஜரில் கையொப்பம்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:33 +0530

செய்தது பற்றி சாட்சியமளித்துள்ளனர். குறிப்பாக பார்வை மகஜர் சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிக்காததால் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அதில், விபத்து குறித்து தங்கள் முன்னிலையில் வரைபடங்கள் எதுவும் வரைந்து அதற்காக கையொப்பம் பெறப்படவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளனர்.

அ.சா.7–தலைமைக் காவலர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், அ.சா.8–புலன் விசாரணை அதிகாரி, விபத்தில் காயம்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த புகார்தாரரின் கணவர் இறந்தது தெரிந்து, இறந்த பிறகு வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது குறித்தும், சட்டப்பிரிவு மாற்றம் செய்தது குறித்தும், பிரேத விசாரணை செய்தது குறித்தும், பிரேத பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுத்தும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்களை விசாரணை செய்தது குறித்தும், மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் புகார்தாரர்–அ.சா.1–ம், அ.சா.4–ம் கேள்விப்பட்ட சாட்சிகள். அ.சா.2 மற்றும் 3 சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ளனர். அவர்களது சாட்சியத்தின்படி, தெற்கு–வடக்கான பாலத்தில் வந்த டாடா ஏசி வாகனம், மேற்படி பாலத்தில் இருந்து மேற்குப் புறமாக திரும்பும்போது கீழக்கு–மேற்கான ரோட்டில் இரு சக்கர வாகனத்தில் வந்த புகார்தாரரின் கணவர் வந்த வாகனத்தின்மீது மோதியதாக சொல்லப்பட்டுள்ளது தெரியவருகிறது. மாதிரி வரைபடம்–அ.சா.ஆ.6–ஐ பரிசோதனை செய்ததில், பாலம் தெற்கு வடக்காக உள்ளது என்பதும், அது கிழக்கு மேற்கான சாலையில் முடிவடைகிறது என்பதும் தெரிய வருகிறது. புகார்தாரர் கொடுத்த புகார் வாக்குமூலத்தில், குறிப்பாக மேற்படி பாலத்தில் டாட்டா ஏசி வாகனத்தை ஓட்டி வந்த எதிரி மேல் பக்கமாக திரும்பியபோது புகார்தாரரின் கணவர் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின்

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:39 +0530

வலது பக்கத்தில் வந்த காரை கவனிக்காமல் வடக்கு பக்கமாக வந்து, மேற்கு பக்கமாக திரும்பியதில் விபத்து ஏற்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தையும், புகார் வாக்குமூல சங்கதிகளையும் ஒருசேர பரிசீலிக்கும்போது, கீழ்மேல் ரோட்டில், இடது ஓரமாக புகார்தாரரின் கணவர் சென்றார் என்பதும், தெற்கு வடக்கான பாலத்தில் இருந்து மேற்கு புறமாக திரும்பும்போது, எதிரி புகார்தாரரின் கணவர் வந்த வாகனத்திற்கு வலது புறத்தில் சென்ற காரில் மோதிவிடக்கூடாது என்பதற்காக புகார்தாரரின் கணவர் வாகனத்தின்மீது மோதியதாகதான் அரசு தரப்பு வழக்கு என அறியமுடிகிறது. எனவே, கார், புகார்தாரரின் கணவர் சென்ற வாகனம், எதிரியின் வாகனம் ஆகிய மூன்று வாகனங்களும் எவ்வாறு சென்றன என்பது குறித்து அரசு தரப்பில் விசாரணை மேற்கொண்டு எந்த வாகனத்தின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட மேற்படி கார் குறித்து புலன் விசாரணை அதிகாரி எந்த விசாரணையும் செய்து அறிக்கையில் சொல்லவில்லை. அதை தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், பாலத்தில் இருந்து மேற்கு நோக்கி திரும்பியதாக சொல்லப்பட்ட நிலையில், பாலத்தின் இடப்பக்கத்தில் வந்து இடது பக்கமாகதான் எதிரியின் வாகனம் திரும்பப்பட்டிருக்க வேண்டும். புகார் வாக்குமூல சங்கதியின்படி, எதிரியின் வாகனம் அவ்வாறு திரும்பும்போது, புகார்தாரரின் கணவர் சென்ற வாகனத்திற்கு வலது பக்கத்தில் சென்றதாக சொல்லும், மேற்படி காரையே முதலாவது சந்தித்திருக்க வேண்டும். இவற்றை குறித்து அறிய விபத்து நடந்த இடத்தினை மோட்டார் வாகன ஆய்வாளர் கொண்டு ஆய்வு செய்திருத்தல் அவசியம். ஆனால், அவ்வாறு எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை. விபத்து நடந்த இடத்தில், எந்த பகுதியில் இரத்தக் கரை படிந்திருந்தது என்பது குறித்த எந்த சங்கதிகளும் மாதிரி வரைபடத்தில் தெரிவிக்கவில்லை. விபத்து

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:44 +0530

தொடர்பாக வாகனங்கள் எங்கிருந்து கைப்பற்றப்பட்டன என்பது தொடர்பாகவும், சம்பவ இடத்தில் மேற்படி வாகனம் எந்த நிலையில், எந்த பகுதியில் இருந்தது என்பது தொடர்பாகவும் எவ்வித சங்கதியும் வழக்கு கோப்பில் சொல்லப்படவில்லை. எனவே, புகார்தாரரின் கணவர் சென்ற வாகனத்தின் வலது பக்கத்தில் சென்றதாக சொல்லும் அந்த காரின் கார் ஓட்டுநரால்தான் விபத்து ஏற்பட்டது என்றும் தவறுதலாக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரி தரப்பில் சொல்லப்பட்டுள்ள சந்தேகம் ஏற்கக்கூடியதாகவும், அது வழக்கினை பாதிக்கக்கூடியதாகவும் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டை பொறுத்தவரையில், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி இ.த.ச.பிரிவு 279, 304(A)–ன் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.255(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக,**

**1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள், 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என்று, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு. 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.**

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:48 +0530

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026**–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11––ஆம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:56:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள் :–</u>**

| | |
|---|---|
| அ.சா1 | மீனா (புகார்தாரர்) |
| அ.சா.2 | சதீஷ்குமார் |
| அ.சா.3 | அழகர் |
| அ.சா.4 | ராதிகா |
| அ.சா.5 | விக்னேஷ்வரன் |
| அ.சா.6 | பாண்டியன் |
| அ.சா.7 | பூமிநாதன் |
| அ.சா.8 | கோமதி (காவல் ஆய்வாளர்) |

**<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.08.2021 | புகார் வாக்குமூலம் – அசல் |
| அ.சா.ஆ.2 | 08.08.2021 | பார்வை மகசரிலுள்ள அ.சா.5ன் 2வது சாட்சி கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 08.08.2021 | பார்வை மகசரிலுள்ள அ.சா.6ன் 1வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 08.08.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 08.08.2021 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.6 | 08.08.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | – | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை – அசல் |
| அ.சா.ஆ.8 | 11.08.2021 | பிரசன்னாவின் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ9 | 19.08.2021 | TN49 CA 1769 Tata Ace வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ10 | 19.08.2021 | TN48 AY 4741 Hero இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ11 | 11.08.2021 | பிரசன்னாவின் பிரேத பரிசோதனை அறிக்கை |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**–இல்லை.

**சான்றுப் பொருட்கள்:**–இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.11 20:57:02 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவையாறு